Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 324

திங்கட்கிழமை 16 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 29 ஆம் நாள்



## இலங்கை மக்கள் தொடர்பில்

# அனுதாபப்பட முடியும் உதவிசெய்ய முடியாது!

## ஐ.எம்.எப். பிராந்தியப் பணிப்பாளர் கூறுகிறார்

கொழும்பு, ஒக்ரோபர் 16

இலங்கையில் விலைவாசி அதிகரித்துள்ளது. வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளது. மக்கள் துன்பப்படுகிறார்கள் என்பதெல்லாம் எமக்குத் தெரியும். நங்கள் மக்களுக்காக அனுதாபப்படுகிறோம். ஆனால், எங்களால் எல்லோருக்கும் உதவி செய்யமுடியாது – இவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் கிருஷ்ணா சிறிநிவாசன் தெரிவித்துள்ளார். அரச கட்டமைப்பு மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ–ஒ–6)

## தமிழக கப்பல் சேவை வாரத்தில் 3 நாள்களே

பயணிகள் இன்மையால் தீர்மானம்

விரிவு பக். - 02

சந்தைகளில் விவசாயிகளிடம்

## 10 வீதம் கழிவு பெறுவோரை உடன் கைது செய்ய பணிப்பு

விவசாய அமைச்சர் பிறப்பித்தார்

விரிவு பக். - 03

ஜனாதிபதித் தேர்தலுக்கான

## மொட்டின் வேட்பாளர் அடுத்த மாதம் அறிவிப்பு

விரிவு பக். - 11

யாழ்.மத்திய பேருந்து நிலையத்துக்குள்

## காவாலித்தனம் புரிந்த 150 பேருக்கு வலைவீச்சு

விரிவு பக். - 11

## உழவியந்திரம் - மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சியில் நேற்றிரவு சம்பவம்

கிளிநொச்சி, ஒக். 16

கிராஞ்சி - வேரவில் பிரதான வீதியில் வேரவில் மருத்துவமனை முன்பாக நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் »11

## மயிலத்தமடு விவகாரம்; விரைந்து தீர்வுகாண்க!

அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஒக். 16

சட்டவிரோதமாக மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்துள்ள சிங்களவர்களுக்கு அவர்களது சொந்த மாவட்டங்களில் விவசாயக் காணிகளை வழங்கி பிரச் »11

உள்ளூராட்சித் தேர்தலுக்கு

## கட்டம் கட்டமாக நிதியை வழங்குக!

புதிய ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஒக். 16

ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலை மீண்டும் நடத்துவதற்கான புதிய முயற்சியில் தேசிய தேர்தல் ஆணைக்குழு இறங்கியுள்ளது. இதற்கமைய தேர்தலை நடத்து »11

புலமைப்பரிசில் பரீட்சை

## 45 நாள்களில் பெறுபேறுகள்

கொழும்பு, ஒக். 16

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 45 நாள்களுக்குள் வெளியிடப் »11

## இஸ்ரேலில் வேலைவாய்ப்பு: மிகப்பெரிய மனிதக் கடத்தல்

தூதரகம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 16

சட்டவிரோதமான முறையில் இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அழைத்து வருவதற்கு »11

## சீனாவுக்கு ரணில் இன்று பயணம்

கொழும்பு, ஒக். 16

சீனாவில் நடைபெறும் பட்டுப்பாதைத் திட்டத்தின் 3ஆவது சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநாட் »11

## கடையடைப்புத் தொடர்பில் கிழக்கில் நாளை ஆராய்வு

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சந்தித்த தமிழ்க் கட்சித் தலைவர்கள் முடிவு

யாழ்ப்பாணம், ஒக். 16

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள கடையடைப்புத் தொடர்பில் கிழக்கு மாகாண பொது அமைப்புகளை நாளை செவ்வாய்க்கிழமை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். »11

## அரச பணியாளர்களுக்கு சம்பள அதிகரிப்பாம்!!!

அமைச்சர் மஹிந்தானந்த தகவல்

கொழும்பு, ஒக். 16

இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக கப்பல் சேவை வாரத்தில் 3 நாள்களே



## பயணிகள் இன்மையால் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக்.16

**காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையில் நடைபெறும் பயணிகள் கப்பல் சேவை வாரத்தில் 3 நாள்கள் மட்டுமே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. போதிய பயணிகள் இன்மையாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

காங்கேசன்துறை - நாகபட்டினம் பயணிகள் கப்பல் போக்குவரத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நாகபட்டினத்தில் இருந்து 50 பேர் காங்கேசன்துறைக்கு வந்திருந்த நிலையில், காங்கேசன்துறையில் இருந்து 30 பேர் நாகபட்டிணம் சென்றிருந்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பயணம் செய்வதற்குப் போதிய அளவு ரிக்கெற் முன்பதிவு இல்லாத காரணத்தால் பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாள்கள் மட்டும் தற்பொழுது கப்பல் இயக்கப்பட உள்ளது என்றும் பயணிகள் கப்பல் சேவையை நடத்தும் நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# உடைமையில் கசிப்பு; பெண், சிறுவன் கைது

யாழ்ப்பாணம், ஒக்.16

ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 17 வயதுச் சிறுவன் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஊரெழு, பொக்கணையில் வீடொன்றைச் சோதனையிட்டபோதே பொலிஸார் கசிப்பைக் கைப்பற்றினர். 17 வயதுச் சிறுவனும் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சிறுவனை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 5 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வீடொன்றில் சோதனையிட்ட பொலிஸார் கசிப்பைக் கைப்பற்றியதுடன், 44 வயதான பெண்ணையும் கைதுசெய்தனர். கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-125)

# முதியவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.16

வடமராட்சி, உடுப்பிட்டியில் முதியவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்திரான் - கரணவாய் மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த பொன்னன் யோகராஜா (வயது - 70) என்ற முதியவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி - தொண்டைமானாறு சந்தியில் உள்ள சனசமூக நிலையத்தின் வெளியே மிதிவண்டி நிறுத்தப்பட்டிருந்த நிலையில் சனசமூக நிலையத்துக்குள் சடலமாக ஒருவர் காணப்பட்டதை அவதானித்த மக்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

சம்பவ தினம் வடமராட்சி பகுதியில் திடீர் மழை பெய்திருந்த நிலையில், முதியவர் சந்நிதி கோவிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் வழியில் சனசமூக நிலையத்தில் மழைக்கு ஒதுங்கியிருந்த நிலையிலேயே மரணம் சம்பவித்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-100)

வடக்கு மாகாண விவசாயிகள்

# தரச்சான்றிதழ் பெறுவதை இலகுபடுத்துதல் அவசியம்

## வடக்கு மாகாண ஆளுநர் விவசாய அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.16

வடக்கு மாகாண விவசாயிகள் ஏற்றுமதித் தரச்சான்றிதழ் பெறுவதை இலகுபடுத்தவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் விவசாய அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே வடக்கு ஆளுநர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவற்றில் முக்கியமானது ஏற்றுமதித் தரச்சான்றிதழ் பெறுவதில் உள்ள இடர்பாடுகள். தரச்சான்றிதழைப் பெறுவதற்கு கொழும்புக்குச் செல்ல வேண்டிய நிலைமையுள்ளது.

இந்த நடைமுறையை இலகுபடுத்தி விவசாயிகள் தரச்சான்றிதழை விரைவாகப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் வெளியிடங்களில் விற்பனை செய்யப்படுகின்றது. அந்தப் பொருள்களுக்கான விலை நிர்ணயம் தொடர்பாகவும் கவனம் செலுத்தவேண்டும் என்றும் வடக்கு ஆளுநர் கோரியுள்ளார். (எ-26,20)

# யாழ். சிறைக்குள் கண் நோய் தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கண் நோய் தொற்று அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

100க்கும் அதிகமான கைதிகள் கண் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களைத் தனிமைப்படுத்தி நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-26)

# யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாய மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 2023ஆம் ஆண்டுக்கான விவசாய மீளாய்வுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்துகொண்டார்.

இந்த ஆண்டு விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

விதை இனம் பெறுதல், உரம் பெறுதல் தொடர்பாகவும், இடர்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுத் தல் தொடர்பாகவும், மாவட்டத்தில் அடுத்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள விவசாய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஏற்றுமதி, இறக்குமதிக்கான சந்தைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் பந்துலசேன, பிரதேச செயலர்கள், துறைசார் திணைக்களத் தலைவர்கள் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-27)

# அத்துமீறி மீன்பிடித்த 27 தமிழக மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக்.16

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 27 பேர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 5 இழுவைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நெடுந்தீவு மற்றும் கச்சதீவுக்கு அருகே இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த தமிழக மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கச்சதீவுக்கு அருகே மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் 3 இழுவைப் படகுகள் கைப்பற்றப்பட்டன. மன்னார் தீவு கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் 15 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களின் 2 இழுவைப் படகுகள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

அதேவேளை, இந்த ஆண்டு இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 137 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 22 இழுவைப் படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைகளில் விவசாயிகளிடம்

# 10 வீதம் கழிவு பெறுவோரை உடன் கைது செய்ய பணிப்பு

## விவசாய அமைச்சர் பிறப்பித்தார்

யாழ்ப்பாணம், ஒக்.16

**யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள சந்தைகளிலுள்ள 10 வீத கழிவு நடைமுறையை உடனடியாக நிறுத்தி, அதனுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்ய உத்தரவிட்டுள்ளார் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர.**

மாவட்ட விவசாய மீளாய்வுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் சந்தைகளில் பெறப்படும் கழிவு நடைமுறை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள சில சந்தைகளில் விவசாயிகளிடம் இருந்து 10 வீதக் கழிவு பெறும் நடைமுறை காணப்படுகின்றது. திருநெல்வேலி, மருதனார்மடம், சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளைக் குறிப்பிட முடியும். விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டு கழிவு பெறப்படுகின்றது. விவசாயிகள் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப் பயப்படுகின்றனர், பழிவாங்கப்படலாம் என்ற அச்சமே இதற்குக் காரணம். இந்த விடயத்தை விவசாயிகளின் பொதுவான முறைப்பாடாக, குற்றச்சாட்டாகக் கொள்ள வேண்டும். இந்த நடைமுறையைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தை ஆராய்ந்த விவசாய அமைச்சர், விவசாயிகளிடம் 10 வீதம் கழிவு பெறும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த உத்தரவிட்டதுடன், இதனுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யவும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், பிரதேசசபைச் செயலர்கள் இந்த விடயத்தில் ஒத்துழைப்பை வழங்கி, இவை தொடர்பான தகவல்களைப் பொலிஸாருக்கு வழங்கவேண்டும்.

அவ்வாறு செய்தால் இந்த நடைமுறையைக் கட்டுப்படுத்துவது இலகுவாக இருக்கும் என்று வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டினார். எதிர்காலத்தில் பிரதேச சபைகள் சந்தைகளைக் குத்தகைக்கு வழங்கும்போது, கழிவு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்ற நிபந்தனையும் சேர்க்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (எ-26-20)

## சனநெரிசலைத் தவிருங்கள் மருத்துவர்கள் ஆலோசனை

கண் நோய் பரவுவதைத் தடுக்க இயன்றவரை நெரிசலான இடங்களிலிருந்து விலகியிருப்பதும் நோயாளிகளுடன் தொடர்பை தவிர்ப்பதும் அவசியம் என தேசிய கண் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்துள்ளார்.

கண் சிவத்தல், கண்களில் வலி, கண்களைத் திறப்பதில் சிரமம், கண்களில் நீர் வடிதல், வெளிச்சத்தை பார்ப்பதில் சிரமம் போன்றவை இந்த நோயின் அறிகுறிகளாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பெற்றோர் மாணவர்களின் பாதுகாப்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (எ-இ)

## ரயிலுடன் மோதி மாடுகள் மரணம்

கிளிநொச்சி, ஒக்.16

ஆனையிறவில் ரயிலுடன் மோதி 17 மாடுகள் உயிரிழந்துள்ளன. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

11 பசு மாடுகளும், 6 நாம்பன் மாடுகளும் உயிரிழந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலுடன் மோதியே இவை உயிரிழந்துள்ளன.

கால்நடை வளர்ப்பாளர்களின் அசமந்தப் போக்காலேயே அநியாயமாகக் கால்நடைகள் உயிரிழக்க நேரிடுகின்றது என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (எ-113)



இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ட்ரூ பற்றிக் யாழ்ப்பாணம் கோட்டைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார். எதிர்கால அபிவிருத்தித் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார். (எ-125)



வடிகாலமைப்புச் சபையின்

## குழிக்குள் தவறி வீழ்ந்து நிறைமாதப் பசு சாவு!

கிளிநொச்சி, ஒக்.16

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அகழ்ந்த குழியில் வீழ்ந்து பசு ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் கிளிநொச்சி, உருத்திரபுரம் வடக்கில் நடந்துள்ளது.

கன்று ஈனுவதற்குச் சில மாதங்களே உள்ள நிலையில் பசு குழிக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளது. இந்தக் குழியில் வீழ்ந்த 3 மாடுகள் ஏற்கனவே மீட்கப்பட்டிருந்த நிலையில், பசு உயிரிழந்துள்ளது.

மாடு வளர்ப்பைத் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மக்கள், இவ்வாறான சம்பவங்களால் தங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-113)

## பதினம் தெரியுமோ?

ஆரோ ஒருத்தனுக்கு போயிலை வித்து , காசு கிடைக்காமல் ஏமாந்து போய், கடைசியா வெறும் கோவணத்தோட ஒருத்தர் தன்ர மனக்குறையைச் சொல்லியழுகிறதுக்கு கதிர்காமத்துக்குப் போனாராம். அங்க பார்த்தா கதிர்காமக் கந்தனும் கோவணத்தோட நிண்டதைக் கண்டிட்டு 'முருகா நீயும் அவனுக்குப் போயிலை வித்ததாலையோ உனக்கும் இந்த நிலை?' எண்டு கேட்டாராம். இப்பிடியொரு கதை யாழ்ப்பாணத்தில கனபேர் சொல்லிக் கேள்விப்பட்டிருப்பியள். கிட்டத்தட்ட அதேமாதிரி ஒருசம்பவம் ஊர்காவற்றுறை - புளியங்கூடலில நடந்திருக்கு.

ஊர்காவற்றுறையில போயிலைத் தோட்டம் செய்யிறவை, கொழும்பில கொண்டுபோய் விக்கிறவையிட்டத்தான் அப்பிடியே விலைபேசிக் குடுக்கிறவை. அவையும் வாங்கிக் கொண்டு போய், கொழும்பில நல்ல விலைக்கு வித்துப் போட்டு, முதலே பேசின காசைக் கொண்டந்து தோட்டக்காரரிட்டக் குடுப்பினம். சிலர் முதலே காசைக் குடுத்தும் வாங்கிறவை. ஆனாலும் வித்த பிறகு காசைக் குடுக்கிறவைதான்கூட. அப்பிடி விக்கக் குடுக்கேக்க பில் எழுதிறதோ, இல்லாட்டி வேற ஏதும் எழுத்துமூலம் போயிலையைக் குடுத்ததெண்டு உறுதிப்படுத்துற ஆவணத்தைக் குடுக்கிறதோ இஞ்ச இல்லை. எல்லாம் வாய்வார்த்தையை நம்பித்தான் நடக்கும். அதோட விக்கிறவரும், வாங்கிறவரும் ஒரே ஊர்க்காரர், முன்னப் பின்ன தெரிஞ்சவை எண்டதாலயும் அப்பிடி எழுத்துமூலமா ஒண்டும் வாங்கிறேலை.

இப்ப என்னெண்டால், கொழும்பில கொண்டு போய் போயிலையை வித்துப்போட்டு காசைத்தாறன் எண்டு அங்கையுள்ளவையிட்ட போயிலையை 'லொட்டா' வாங்கிக் கொண்டு போன ஒருத்தர், காசு குடுக்காமல் கம்பி நீட்டிப்போட்டார். கிட்டத்தட்ட இப்பிடி 25 பேருக்கும் மேல போயிலை விக்கக்குடுத்து ஏமாந்திருக்கினம். மூண்டரைக் கோடி ரூபாவுக்கும் மேல சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டினவரை ஒருமாதிரி பொலிஸ் வளைச்சுப் பிடிச்சிருக்குது.

இப்ப இன்னும் ரண்டு மாதத்தில அவையின்ர காசை திருப்பிக் குடுக்கிறன் எண்டு ஆள் சத்தியக்கடுதாசி முடிச்சுக் குடுத்திருக்கிறாராம். இப்பிடிப் போயிலை வித்து வந்த கோடிக்கணக்கான காசை என்ன செய்தார் எண்டதுதான் ஆருக்கும் தெரியேலை.

வெயிலுக்கையும் மழைக்குள்ளையும் தோட்டத்துக்க நிண்டு, பாடுபட்டு போயிலையை விளைவிச்சு, அதைக் காசாக்குவம் எண்டு குடுத்ததை , தானே சுருட்டுறதுக்கு எப்பிடித்தான் அந்தாளுக்கு மனம் வந்திச்சோ? இப்பவும் ஆள் குடுத்த சத்தியக்கடுதாசியை நம்பேலுமோ? எண்டதுதான் அவருக்குப் போயிலையை விக்கக் குடுத்தவையின்ர பயம். இந்த ரண்டு மாத இடைவெளியில ஆள் வேற எங்கையும் மாறினால் இவையின்ர பாடு தொப்பிதான். கடைசியா இவையும் கதிர்காமக் கந்தனிட்ட போய் - கந்தா நீயும் போயிலை வித்தோ கந்தறுந்தனீ? எண்டு மண்டாடத்தான் வேணும்போல.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயனின் பரிசுக்குவியல்

**அவுஸ்திரேலியா- இலங்கை அணிகளுக்கிடையிலான இன்றைய (16.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ......................................

பெயர் : ......................................
முகவரி : ......................................
......................................
தே.அ.இல : ......................................
தொ.இலக்கம் : ......................................

தினம் ஒரு பரிசு 11

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ......................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

பெயர் : ......................................
முகவரி : ......................................
......................................
தே.அ.இல : ......................................
தொ.இலக்கம் : ......................................

மெகா பரிசு

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இங்கிலாந்துக்கு அதிர்ச்சிகொடுத்து

# தொடர்தோல்விக்கு ஆப்கன் முற்றுப்புள்ளி



நடப்பு சம்பியனான இங்கிலாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நேற்றைய ஆட்டத்தில், ஆப்கானிஸ்தான் அணி 69 ஓட்டங்களால் இங்கிலாந்தை வீழ்த்தி அதிர்ச்சியளித்தது. இந்த வெற்றி மூலம் 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்திலிருந்து இதுவரை 14 ஆட்டங்களில் தொடர் தோல்விகளைச் சந்தித்த ஆப்கான் அணி அதற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

டில்லியில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. துடுப்பெடுத்தாடிய ஆப்கன் அணி 49.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் ரஹ்மனுல்லா குர்பாஸ் 80 ஓட்டங்களை எடுத்தார். ஆப்கன் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் ரஹ்மனுல்லா குர்பாஸ் மற்றும் இப்ராஹிம் ஸத்ரான் இணைந்து 114 ஓட்டங்களுக்கு வலுவான இணைப்பாட்டத்தை அமைத்திருந்தனர். இக்ரம் அலிகில் 58 ஓட்டங்களை எடுத்தார்.

285 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இங்கிலாந்து அணி விரட்டியது. தொடக்கம் முதலே சீரான இடைவெளியில் இங்கிலாந்து அணி வீரர்கள் இலக்குகளைப் பறிகொடுத்தனர். அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஹாரி புரூக் 66 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 40.3 பந்துப் பரிமாற்றங்களில் 215 ஓட்டங்களுக்கு இங்கிலாந்து அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

இங்கிலாந்து அணி தான் விளையாடிய மூன்று ஆட்டங்களில் இரண்டில் தோல்வியைத் தழுவியுள்ளது. (ஒ-5)



## இன்றைய ஆட்டம்

அவுஸ்திரேலியா — இலங்கை

இடம் : லக்னோ
நேரம்: பி.ப. 2.00

# அன்புள்ள பாபருக்கு....

பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாமுக்கு, தான் கையொப்பமிட்ட ஜெர்சியொன்றைப் பரிசாக வழங்கியுள்ளார் இந்திய அணியின் நட்சத்திர வீரர் கோலி.

இந்த ஆட்டம் 'எதிரிகளின் ஆட்டம்' என்பதுபோல் ஊடகங்களில் காண்பிக்கப்பட்டது. அதற்கேற்ப ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் மைதானத்தில் ஒன்றுகூடி இந்தியாவின் வெற்றியைக் கொண்டாடித் தீர்த்தனர். ஆனால் வீரர்களின் ஓய்வறை மிக அமைதியாகவே இருந்தது. இரு அணி வீரர்களும் எவ்வித ஆவேசத்தையும் ஆக்ரோசத்தையும் வெளிப்படுத்தவில்லை. இவ்வாறிருக்கையில் கோலி ஒருபடி மேல்சென்று தனது ஜெர்சியை பாபருக்குப் பரிசாக வழங்கியுள்ளாராம். (ம)



## தினம் ஒரு பரிசு நாள் 10 இன் வெற்றியாளர்கள்

ச.சேயோன் - இணுவில்
கி.கிசோர்த்தமன் - வட்டக்கச்சி
பா.நிர்த்திகா - புன்னாலைக்கட்டுவன்
இ.ராஜசந்திரன் - நாவாந்துறை
கி.மதுசன் - பருத்தித்துறை
ம.மதிவதனி - மீசாலை
இ.சாத்திதசர்மா - கொக்குவில்
ஜே.ஜனகன் - [illegible]
இ.எயுஜீன் மசனட் - மானிப்பாய்
ஞா.உஷாநந்தன் - கோண்டாவில் கிழக்கு
பா.புஸ்பராசா - வரணி
ஆ.கீதாஞ்சலி - முள்ளியவளை
தே.ஞானசங்கர் - முத்தையன்கட்டு
பு.தேசிகன் - இரணைப்பாலை
இ.மனோஜா - குருமன்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இறக்குமதிகளின் இயலுமை

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான மோதல் 'தீவிரமான பேரழிவு' என்ற நிலைக்குச் சென்றுள்ளதாக எச்சரித்திருக்கின்றது ஐக்கிய நாடுகள் சபை. இஸ்ரேலின் நிலவிழுங்கல் நடவடிக்கையின் மற்றொரு அத்தியாயமாகக் கொள்ளப்படும் அளவுக்கு காசாவின் நிலை கவலைக்கிடமானதாக மாறியுள்ளது. வான்வழியாக மட்டுமல்லாமல் தரைவழியாகவும் காசாவுக்குள் ஊடுருவ ஆரம்பித்திருக்கின்றது இஸ்ரேல். சர்வதேச உறவென்பது பொருளாதாரத்தை மையப்படுத்தி 'நாணயங்களால் நெய்யப்பட்டிருக்கும்' இந்த நூற்றாண்டில் இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான மோதலை காசாவுடனோ அல்லது பலஸ்தீனத்துடனோ வரையறுத்துவிடமுடியாது. நில வரையறைகளைத் தாண்டி அனைத்து நாடுகளையும் இந்தப் போர்நிலை தாக்கும், இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. வெளிப்படையாகச் சொல்வதாயின், இலங்கையின் தலைமீது கத்தி தொங்கிக்கொண்டிருக்கின்றது.

மின்தேவையாக இருக்கட்டும். போக்குவரத்தாக இருக்கட்டும், திரவ எரிபொருளைத்தான் இலங்கை இன்னமும் கணிசமான அளவில் நம்பிக்கொண்டிருக்கின்றது. சூரியசக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க வளப் பயன்பாட்டுக்கு மாறவேண்டிய தேவைப்பாடு கோத்தாபய காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நலிவுநிலையின்போது தெளிவாக உணரப்பட்டாலும் இன்னமும் இந்த மாற்றுப்பாதையை நோக்கிய பயணப்பாட்டை இலங்கை ஆரம்பிக்கவேயில்லை. கொள்கையளவில் காணப்பட்ட இணக்கப்பாடுகளுடன் பூர்வாங்க நடவடிக்கைகளுடன் முற்றுப்பெற்ற விடயமாக இது இருக்கின்றது. ஆதலால், இஸ்ரேல் – ஹமாஸ் மோதல் ஏற்படுத்தப்போகும் எரிபொருள் நெருக்கடி, இலங்கையின் 'தவிர்க்கமுடியாத தேவைப்பாட்டையே' முதலில் இரையாக்கும். குறைந்தபட்சம் 50க்கும் 50 என்ற நிலையில் திரவ எரிபொருளையும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியையும் தன் கட்டமைப்பாக இலங்கை கொண்டிருந்திருந்தால், கொஞ்சமேனும் அச்சப்படாமல் இருந்திருக்கலாம்.


காசாவில் ஏற்பட்டுள்ள மோதலையடுத்து மத்திய கிழக்கு நாடுகள் போர்க்கால நிலைமைக்கு கொஞ்சம்கொஞ்சமாகத் தயாராகி வருகின்றமை வெளிப்படையாக அவதானிக்கப்படுகின்றது. இதன் ஆகப் பெரும் திருப்பமாக அரபு நாடுகள் 'போரொன்றை எதிர்கொள்வதற்கு' சவூதி தலைமையில் கலந்துரையாடல் நடத்தவுள்ளன. இந்தப் போர்நிலைக் கூட்டணியால் மத்திய கிழக்கு நிச்சயம் அமைதியை இழக்கும். அரபு நாடுகள் 'கூட்டணிப் பேச்சை' அடுத்து மத்திய கிழக்கை மையப்படுத்திச் செயற்பட்டுவரும் தொலைநோக்கான திட்டங்களைப் பலநூறு நிறுவனங்கள் கைவிடும் அல்லது பிற்போடும். கட்டுமான வேலைகள் கிடப்புக்குச் செல்லும். இதனால் மத்திய கிழக்கிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் ஏராளம் பேர் தொழில் இழப்பார்கள். இந்தத் தொழிலிழப்பு நாட்டுக்குள் வரவேண்டிய அந்நியச் செலாவணியில் தாக்கத்தை ஏற்படுத்தும். இது ரூபாவின் பெறுமதியை மேலும் மதிப்பற்றதாக்கும். இதன் விளைவாக மீண்டும் ஒரு பணவீக்கம் இலங்கையில் ஏற்படும்.

ஏற்கனவே ஏற்பட்ட பணவீக்கத்தால் விழுந்த சம்மட்டி அடியிலிருந்தும், பொருள் பற்றாக்குறையிலிருந்தும் இன்னமும் நாடு முற்றாக மீண்ட பாடில்லை. இவ்வாறிருக்கையில் இனி ஏற்படலாம் என்று கருதப்படும் இரண்டாம் சுற்று வீழ்ச்சி இலங்கையைப் பல இடங்களில் நின்றுகொல்லும். ஏனெனில், முதலாவது பணவீக்கத்தின்போது நிலைமையைச் சரிசெய்ய திட்டங்கள் இருந்தன. வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள் இருந்தன. ஆனால், இனி ஏற்படப்போகும் பணவீக்கம் நாம் முதலில் கண்டதுபோன்று இருக்காது. ஏனெனில் இந்தமுறை மீட்சிக்கான கதவுகள் முற்றாக அடைக்கப்பட்டிருக்கும்.

**நாளொரு நல்வார்த்தை**

நம்முடைய மிகப்பெரிய பெருமை,
விழாமல் இருப்பதல்ல.
ஒவ்வொருமுறை விழும்போதும்
எழுவதில் இருக்கிறது.

– கன்பூசியஸ் –




# புலம்பெயர் தமிழருடன் பேசுவதற்கு அரசு தயார்

## பிரிட்டன் அமைச்சரிடம் உதவி கோரும் இலங்கை

**கொழும்பு, ஒக்.16**

**புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது. அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அந்தப் பேச்சுகள் வெற்றியடைவதற்கும் பிரிட்டன் அரசாங்கம் தலையிடுவதற்கான வகிபாகங்கள் இருக்கவேண்டும் - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

இலங்கை வந்துள்ள இந்தோ - பசுபிக் பிராந்தியத்துக்கான பிரிட்டன் வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெலியனுடன் நடத்திய சந்திப்பிலேயே அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரிட்டனிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் வடக்கு-கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் தொழில்சார் பயிற்சி நிலையங்களை முன்னெடுப்பதற்கும் முன்வரவேண்டும். இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் விடயத்தில் வெளியாரின் தலையீட்டை விரும்பவில்லை. உள்ளகரீதியில் முன்னேற்றகரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் நீடிக்கும் இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் மற்றும் ஏனைய உள்நாட்டு விடயங்களில் பிரிட்டனிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் கனதியான வகிபாகத்தைக் கொண்டுள்ளனர். பிரிவினைச் சிந்தனை இல்லாத ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை எட்டுவதற்கு எதிர்பார்க்கும் அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைத்து பேச்சு மேசையில் அமர்வதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ளது. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுப் பணியகத்துக்கான செயற்பாடுகள் என்பன முன்னேற்றம் கண்டுள்ளன. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை விரைவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஆரம்பிப்பதற்கு பிரிட்டனின் ஒத்துழைப்புகளைக் கோருகின்றோம் - என்றார். (எ-இ)

# அரச வங்கிகளின் பங்குகளை தனியாருக்கு விற்கத் திட்டம்!

ஆறு அரச வங்கிகளின் பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- அதன் முதற்கட்டமாக அரச வங்கிகள் கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யவுள்ளன. தற்போதுள்ள அரச வங்கி சட்டங்கள் இரத்துச் செய்யப்படும். உலகளாவிய ரீதியிலுள்ள 30 பெரும் அரச வங்கிகளில் உள்ளடங்கும் இரண்டு வங்கிகள், இவ்வாறு பங்குகள் விற்பனை செய்யப்படவுள்ள இந்த ஆறு வங்கிகளில் உள்ளடங்குகின்றன. அரச வங்கிகளை உருவாக்கும் நோக்கம் தொலைத்தூர கிராம மக்களுக்கு சேவை செய்வதே தவிர இலாபம் தேடுவது அல்ல. எதிர்காலத்தில் அரச வங்கிகளை அரசியல் செல்வாக்கு மற்றும் வர்த்தக மாபியாவில் இருந்து பாதுகாப்பதற்காக மக்களுடன் இணைந்து பெரும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன - என்றார். (எ-இ)

**நாளை** 17.10.2023 செவ்வாய்க்கிழமை புரட்டாதி 30

சுபநேரம் : 10.32 – 12.02
ராகுகாலம் : 03.02 – 04.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைதூரக் கண்பார்வை 15 சதவீத மாணவர் பாதிப்பு

## மருத்துவர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.16

**இலங்கையில் 15 சதவீத பாடசாலை மாணவர்கள் தொலைதூரக் கண்பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் கண் மருத்துவர் ஹிரண்ய குணசேகர தெரிவித்துள்ளார்.**

உலக கண்பார்வை தினத்தை முன்னிட்டு தேசிய கண் மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

குழந்தைகள் மிக அருகில் தொலைக்காட்சி பார்ப்பது, புத்தகங்களைப் படிப்பது, தலைவலி, அடிக்கடி கண் சிமிட்டுதல் போன்ற அறிகுறிகளால் பாதிக்கப்பட்டிருந்தால் உடன் சிகிச்சை பெற வேண்டும்.

குறுந்தூரக் கண்பார்வைக் குறைபாடு மயோபியா என்று அழைக்கப்படுகிறது.

இந்தப் பாதிப்புள்ள குழந்தைகளுக்கு பிரெய்லியை அறிமுகப்படுத்தக்கூடாது. பெரும்பாலும் கர்ப்ப காலத்தில் ரூபெல்லாவின் வெளிப்பாட்டின் காரணமாக சில குழந்தைகளுக்கு குறுந்தூர கண்பார்வைக் குறைபாடு காணப்படுகிறது.

எனவே குழந்தைகளின் கண்பார்வை குறித்து பெற்றோர் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். - என்றார். (ச-இ)



## விசேட தேவையுடைய மாணவர்களுக்கு உதவி

கிளிநொச்சி, ஒக். 16

கிளிநொச்சி வடக்கு வலயத்துக்குட்பட்ட நான்கு பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும்முகமாக தளபாடம் மற்றும் தொலைக்காட்சி ஆகியவை வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தருமபுரம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. சுமார் 8 இலட்சம் பெறுமதியான இந்த உபகரணங்களை கிளிநொச்சி வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் சிவனருள்ராஜா மற்றும் பிரதிக்கல்விப்பணிப்பாளர் (விசேட கல்வி) இ.ஜெயகரன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (ச-113)

33 ஆண்டுகளின் பின்

## சொந்தஇடம் திரும்புகிறது வலி.வடக்கு உபஅலுவலகம்

யாழ்ப்பாணம், ஒக்.16

வலி. வடக்குப் பிரதேசசபையின் காங்கேசன்துறை உப அலுவலகம் மற்றும் பொதுநூலகம் என்பன சுமார் 33 வருடங்களின் பின்னர் மீண்டும் சொந்தக் கட்டடத்தில் எதிர்வரும் புதன்கிழமை முதல் இயங்கவுள்ளன என்று பிரதேச சபை அறிவித்துள்ளது.

1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்தபோது பிரதேசசபையின் உபஅலுவலகம் மற்றும் நூலகம் என்பனவும் இடம்பெயர்ந்தன. யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் இவை தற்காலிகமாக இயங்கிவந்தன.

2016ஆம் ஆண்டு காங்கேசன்துறை உள்ளிட்ட சில பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட போதிலும் வடக்கு பிரதேசசபை அலுவலகக் கட்டடம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தது.

இந்நிலையில் இந்த வருட ஆரம்ப காலப் பகுதியில் வலி. வடக்குப் பிரதேசசபையின் கட்டடம் அமைந்துள்ள பகுதி உள்ளிட்ட சில பகுதிகளை இராணுவத்தினர் விடுவித்துள்ளதையடுத்து சுமார் 33 வருடங்களின் பின்னர் மீண்டும் தனது சொந்தக் கட்டடத்தில் வலி. வடக்கு பிரதேசசபை உப அலுவலகம் இயங்கவுள்ளது. (ச-26)



சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி

# மன்னார் மாவட்டம் சம்பியன்; கிளிநொச்சி இரண்டாமிடம்!

யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்கு மாகாண மாவட்டச் செயலகங்களுக்கிடையிலான சிநேகபூர்வ மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட செயலக அணி சம்பியனானது. கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி இரண்டாமிடத்தைப் பெற்றது.

நடப்பாண்டுக்கான குறித்த மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டித்தொடர், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதற்போட்டியில் யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலக அணிகள் மோதி மன்னார் மாவட்டச் செயலக அணி வென்றது.

அதேவேளை வவுனியா மாவட்டச் செயலக அணியும் கிளிநொச்சி மாவட்டச் செயலக அணியும் மோதிக்கொண்டதில் கிளிநொச்சி மாவட்டச்செயலக அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. மன்னார் மாவட்டச் செயலக அணியும் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணியும் மோதி மன்னார் மாவட்டச் செயலக அணி இறுதிக்குள் நுழைந்தது. இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்டச் செயலக அணியும், கிளிநொச்சி மாவட்டச் செயலக அணியும் மோதிக்கொண்டதில் மன்னார் மாவட்டச் செயலக அணி வெற்றிபெற்றுச் சம்பியன் வென்றது. கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (ச-113)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**இடபம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** சாதிக்கவேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளில் நன்றாக சிந்தித்து செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**சிம்மம்:** சிந்தித்து செயல்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வீண் செலவுகளால் கையிருப்பு கரையும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீட்டைத் தவிர்க்கவும். முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**விருச்சிகம்:** மனதில் தெளிவாகச் சிந்திக்கும் திறன் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு குடும்பத்துடன் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.


**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம். மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும்.

**கும்பம்:** பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்த்துவிடவும்.

**மீனம்:** சொல்லிலும் செயலிலும் பொறுமை தேவைப்படும் நாள். தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் கந்தையா குணேந்திரதாசன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (15.10.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (17.10.2023) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்வு நடைபெறும்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதந்து
மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாரியந்தனை, இடைக்காடு (cs.52366) (AK.1)
குடும்பத்தினர்
0762061088

# மரண அறிவித்தல்



## திருமதி
## நாகரத்தினம் தெய்வேந்திரம்
(முன்னாள் **Paramaraja Trading Company** -
உரிமையாளரின் இளைய மகள்)

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் தெய்வேந்திரம் கடந்த (13.10.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா முத்தம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் மனைவியும், பரமேஸ்வரி (பேபி), நற்குணராசா (கனடா), சர்வேஸ்வரி, தவநேசன் (சின்னன்னை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சபாநாயகம் மற்றும் கிரிஜா (கனடா), தர்மேந்திரன் (நுணாவில்), சுசீலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரதாப் (கனடா), சோபனா (லண்டன்), கல்பனா, வக்சலா (பளை), மதுசன் (கனடா), அம்சன் (கனடா), சபிஷன் (கனடா), லதாங்கி (Teacher - மட்டுவில் - சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்), ஹம்சத்தவன் (கம்சன்), கபிலாயினி (கனடா), துவாரகன், தனுகாயினி, சயந்தன் (கனடா), அருணகிரிநாதன் (லண்டன்), பிரதீபன் (லண்டன்), சிவரூபன் (பளை), சோபிகா (கனடா), நிறஞ்சன் (இத்தாலி), நிரூபன் (கனடா), ஆர்த்திகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ரிசாந்த் (கனடா), டிவ்யா (கனடா), டிபிஷன் (லண்டன்), கபிஷயன் (லண்டன்), அபினுகா, பவிக்சன், அதிரதன், ஜெய்ஸ்வந்த் (கனடா), கிருத்திக்ஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான பரமசாமி, நவசிவாயம், மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற தவமணி மற்றும் தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற அப்பாச்சாமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: **077 071 1823**
குடும்பத்தினர்
(…4423) (2.6)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 15.10.1945
மறைவு 13.10.2023



எமது கல்லூரியில் பணியாற்றும் திரு.சி.சுந்தரமூர்த்தி ஆசிரியரின் மாமியும் திருமதி க. சுந்தரமூர்த்தி ஆசிரியையின் தாயுமான


## திருமதி சின்னத்தம்பி அன்னம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 02 . 08 . 1959
மறைவு 16 . 09 . 2023



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் நாரந்தனையை
வதிவிடமாகவும் கொண்ட

## அமிர்தலிங்கம் சச்சிதானந்தம் (சச்சி)

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரா மானிலத்தில்"

அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (16.10.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.
(cs26624) (N.1)

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கூறுவிலை கோரல்
## இலங்கை மின்சாரசபை, வடமாகாணம்.

**கூறுவிலை இலக்கம்** : **DGM/NP/CE(Com)/T/2023/103**
**கூறுவிலையின் பெயர்** :

வட மாகாணத்தில் பயன்படுத்திய இருப்பு பொருட்களை அகற்றுவதற்கான ஏலம்.
வருடாந்த பௌதிக இருப்பு கணக்கெடுப்பு மெய்மையாய்வு **2021**
Lot A1- இதர பொருட்கள்
Lot C1 மின்மாற்றி
Lot C2 மின்மாற்றி
Lot D1 மர கம்பங்கள்
Lot F1 அலுமினியம் / செம்பு கேபிள்கள்

**ஏலப் பத்திர வைப்புத் தொகை** :

ஒவ்வொரு பொருளுக்கும் வழங்க வேண்டிய ஏலப் பத்திரத்தின் மதிப்பு (ரூபா)

| | |
|---|---|
| Lot A1- இதர பொருட்கள் | 6,000.00 |
| Lot C1 மின்மாற்றி | 3,200.00 |
| Lot C2 மின்மாற்றி | 6,300.00 |
| Lot D1 மர கம்பங்கள் | 2,000.00 |
| Lot F1 அலுமினியம் / செம்பு கேபிள்கள் | 220,000.00 |

**கூறுவிலையின் இறுதி திகதி :**
02.00 மணி 09 ந் திகதி நவம்பர் மாதம் 2023 ம் ஆண்டு

**கூறுவிலை விண்ணப்பபடிவத்தின் விலை/ பெறும் இடம்:**
ரூபா **1,000.00**
**பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்,**
**இலங்கை மின்சாரசபை, பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம்: 021 222 0496**

**எந்திரி. அ. சிவதீபன்**
**மின் பொறியியலாளர்**
**பொருள் முகாமைத்துவம் (வட மாகாணம்)**
(cr.40766) (N.1)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களால் குருதிக் கொடை முகாம் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப் பட்டது. (ச-66)

## கௌரவிப்பும் கலை நிகழ்வும்

அளவெட்டி சைவ வாலிபர் சங்க அறநெறிப் பாடசாலையின் ஓராண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு, அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சாதனையாளர் கௌரவிப்பும் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சைவ வாலிபர் சங்க திருவடி நிழல் மடாலயம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டியில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் வ.நல்லதம்பி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் விருந்தினர்களாக தெல்லிப்பழை வலிகாமம் வடக்குப் பிரதேசசபை செயலர் ச.சிவஸ்ரீ, காங்கேசன்துறை வலிகாமம் வடக்குப் பிரதேசசபை செயலாளர் சு.சுதர்ஜன், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனம் அல்ல இது இலங்கை!

## முஸ்லிம்களை வம்புக்கு இழுக்கும் டான் பிரசாத்



**கொழும்பு, ஒக். 16**

**இது இலங்கை, சிங்கள, பௌத்தர்களின் நாடாகும் என்பதையும், இலங்கை என்பது பலஸ்தீனம் அல்ல என்பதை இங்குள்ள சில அடிப்படைவாத முஸ்லிம்கள் புரிந்துகொள்ள வேண்டும், முடியாவிட்டால் பலஸ்தீனம் சென்று குடியேறலாம்.**

-இவ்வாறு தன்னை சமூக செயற்பாட்டாளர் என அடையாளப்படுத்திக்கொள்ளும் கடும்போக்கு சிங்கள தேசியவாத அமைப்புகளுடன் இணைந்து செயற்படும் டான் பிரசாத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இஸ்ரேல் - பலஸ்தீனத்துக்கிடையில் நடைபெறும் போரை இலங்கை விவகாரமாக மாற்றிக்கொள்ளக் கூடாது. ஆனால், எங்கேயோபோகும் பாம்பைப் பிடித்து, சாரத்துக்குள் போட்டும் கொள்ளும் வகையில் இதுவிடயத்தில் இங்கு சில தரப்புகள் செயற்படுகின்றன. பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்து முஸ்லிம்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர், சில சிங்கள அமைப்புகள் இஸ்ரேலுக்கு ஆதரவாகக் களமிறங்கியுள்ளன. அந்த இரு நாட்டு பிரச்சினையும் எமக்குத் தேவையில்லை.

எங்கேயோ எறியப்படும் ரொக்கெட் தாக்குதலை எமது நாட்டுப் பக்கம் திருப்பும் வகையில் செயற்படவேண்டாம். 'கெற்றப்போல்' வாங்குவதற்குக் கூட எமது நாட்டில் பணம் இல்லை. இலங்கை என்பது பலஸ்தீனம் அல்ல, இலங்கைக்கு இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர், இங்கு தங்கி இருக்கின்றனர், அதன் மூலம் அந்நியச்செலாவணி கிடைக்கின்றது. இங்கு வரும் இஸ்ரேலியர்களை விரட்டுவதற்கான உரிமை முஸ்லிம்களுக்கு இல்லை என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன். அதை ஏற்றுச் செயற்பட முடியாத முஸ்லிம்கள் இலங்கையில் இருந்தால் அவர்கள் பலஸ்தீனத்துக்குச் செல்லலாம்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டால் நாமும் வீதிக்கு இறங்க வேண்டிவரும்.

இஸ்ரேல் என ஒரு நாடே இருக்கவில்லை எனக் கூறுபவர்கள், நாளை இலங்கை என ஒரு நாடு இருக்கவில்லை, அது அரபு நாடு என்றுகூடக் கூறலாம். இது சிங்கள, பௌத்தர்களின் நாடாகும்- என்றார். (எ-44)

# 6 அமைச்சுப் பொறுப்பு ஜனாதிபதியின் வசம்

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஒக். 16

நஸீர் அஹமட் வகித்து வந்த சுற்றாடல் அமைச்சும் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டு விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சு தமது பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமெனத் தீர்மானித்து, ஜனாதிபதி வழங்கிய உத்தரவுக்கமைய ஜனாதிபதியின் செயலாளரால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலை, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வெளியிட்டார்.

முன்னாள் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வறிதானதைத் தொடர்ந்து அலி ஸாஹிர் மௌலானா அந்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மீனவர் பிரச்சினையில் அரசியல் வேண்டாம்!

## ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16

எங்கள் பிரச்சினைகளை அரசியலாக்காது, அவற்றைத் தீர்க்கவேண்டும் என்று ஊர்காவற்றுறைக் கடற்றொழிலாளர் சமாசத்தின் செயலாளர் அ.அன்னராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழகக் கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் தொழில் செய்ய அனுமதி கொடுப்பது தொடர்பாக அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது என்று பிரதமர் கூறியுள்ளார். ஆனால், இலங்கைக் கடற்றொழில் அமைச்சர், தமிழக கடற்றொழிலாளர்களின் படகை அனுமதிக்க முடியாது என்று கூறுகின்றார்.

இருநாட்டு கடற்றொழிலாளர்கள் பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பது குறித்து எமக்குத் தெரியப்படுத்தவேண்டும். கடற்றொழிலாளர்கள் பிரச்சினையை இரு நாடுகளும் பேசித் தீர்க்கவேண்டும். அதைவிடுத்து அரசாங்கத்தில் உள்ளவர்கள் ஆளுக்கு ஒரு விடயத்தைச் சொன்னால் நாம் எதனை நம்புவது?

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து அறிவிக்கவேண்டும். பிரதமரின் கருத்தா, கடற்றொழில் அமைச்சின் கருத்தா இறுதியானதும், தீர்க்கமானது மானது என்பதை எமக்கு அறியத் தரவேண்டும்- என்றார். (எ-27)

# சீர்திருத்தங்களால் தேர்தல்கள் நிற்காது

## நீதி அமைச்சர் கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.16

அரசாங்கம் தேர்தல்களைப் பிற்போடும் நோக்கிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு தேர்தல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த முயல்கின்றது என்ற குற்றச்சாட்டை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாகக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

இந்த சீர்திருத்தங்கள் தேர்தல்களைப் பிற்போடாது. இந்த சீர்திருத்தங்கள் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புள்ளவை அல்ல.

இது அச்சங்களால் நிறைந்துள்ள நாடு. நாங்கள் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தால் என்ன அவசரம் எனக் கேட்பார்கள், தாமதித்தால் ஏன் சீர்திருத்தங்களைக் கொண்டுவரத் தாமதம் எனக் கேட்பார்கள்.

**அரசாங்கம் சீர்திருத்தங்கள் காரணமாகத் தேர்தல்களைப் பிற்போடாது. இதுதொடர்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளப்படும். அவர்களின் ஆலோசனைகள் உள்வாங்கப்படும் -என்றார். (எ-இ)**

# ஹமாஸ்- இஸ்ரேல் தீர்வுக்கு உலக ஒருமைப்பாடு தேவை

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 16

உக்கிரமடைந்து வரும் ஹமாஸ் - இஸ்ரேல் மோதலுக்குத் தீர்வு காண உலகளாவிய ஒற்றுமை அவசியம். இல்லையாயின் தற்போதைய போக்குகள் உலகளாவிய ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிற்றி சென்டரில் நடைபெற்ற மாநாட்டில் ஹமாஸ் - இஸ்ரேலுக்கு இடையிலான மோதல் நிலைமை குறித்து அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஹமாஸ் - இஸ்ரேலுக்கு இடையிலான மோதல் பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளின் கண்டனத்துக்கு ஆளாகியுள்ள நிலையில் மில்லியன் கணக்கான மக்கள் இந்தப் போரில் சிக்குண்டுள்ளனர்.


அடுத்து என்ன நடக்கப் போகிறது? காஸாவில் வசிப்பவர்களை வெளியேற இஸ்ரேல் கோருவதால், இஸ்ரேல் காஸாவுக்குள் நுழையப் போகிறது என்றே தெரிகிறது.

மத்திய தரைக்கடலில் விமானம் தாங்கிய போர்க்கப்பல்களுடன் கூடிய இரு படைப்பிரிவுகள் செயற்படுமானால் அது பாரதூரமான நிலையை ஏற்படுத்தும். அதனால் ஏற்படப்போகும் அளவு கடந்தபிரச்சினைகளின்விளைவை முகாமைத்துவம் செய்ய முடியாத நிலைமை ஏற்படும்.

எனவே இந்த மோதலுக்குத் தீர்வு காண ஒன்றையொன்று சார்ந்திருக்கும் உலகில் ஒற்றுமை அவசியம் - என்றார். (ச-44)

# அடுத்த மாதம் தொடக்கம் பயிரழிவுக்கான இழப்பீடு

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 16

இந்த ஆண்டில் ஏற்பட்ட பயிர் அழிவுகளுக்கான இழப்பீடு நவம்பர் மாதம் முதல் வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

**இந்த வருடம் 58 ஆயிரத்து 770 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக** செய்கை மோசமான காலநிலை மற்றும் வறட்சி காரணமாக அழிவடைந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 965 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

**பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது- என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
11.09.1943

மறைவு
27.09.2022

வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட

## மூத்ததம்பி கனகலிங்கம்

(காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம் உயர் நிலை உத்தியோகத்தர்)

திதி: துதியை பூர்வபக்கம் (16.10.2023)

நிழலாகிப்போன நிஜமே!
எம் கனவில் கலந்து உங்கள்
எல்லையற்ற நினைவுகள்
நிற்கின்றன நிழலாக !

உங்களை இழந்து ஆண்டு ஒன்று ஆனாலும்
உங்கள் அன்பு முகமும்
நேசப் புன்னகையும்
மறையவில்லையே!

கோப்பாய் மத்தி, கோப்பாய்.
077 800 2797

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வீடு

**காணி விற்பனைக்கு**
யாழ். மணிக்கூட்டு வீதியில்
(நீராவியடிப் பிள்ளையார் கோயில்ப் பக்கம்)
2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**077 710 2692**

யாழ்ப்பாணம், ஒக். 16
கொடிகாமம், தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றுக்கு இராணுவத்தினரால் புதிதாக வீடு அமைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

523 ஆவது காலாட்படை பிரிவினால் 11 ஆவது காலாட்படை பொறியியல் பிரிவால் இந்த வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டது.



வீடு கையளிக்கும் நிகழ்வு மேஜர் ஜென்ரல் சுஜீவ கெட்டியாராச்சி தலைமையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

(ச-100)

**மணி விழா வாழ்த்து**



**திருமதி ஜெயகுமாரி பேரின்பநாதன்**
(ஆரம்பக் கல்வி SLTS - I)

எமது பாடசாலையில்
ஆசிரியராக கடமையாற்றி
இன்றுடன் (16.10.2023)
திங்கட்கிழமை ஓய்வுபெற்றுச்
செல்லும் ஆசிரியருக்கு
மணி விழா வாழ்த்துக்கள்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சேவைக்காலம்:**

யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்
1989.11.29-1993.01.31
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை
1993.02.01-1994.12.31
யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்
1995.01.01-1996.05.14
முல்/வவுனிக்குளம் திருநகர் வித்தியாலயம்
1996.05.15-2002.12.31
யா/சாவகச்சேரி மகளீர் கல்லூரி
2003.01.01-2008.12.31
யா/நல்லூர் சென்.பெனடிக் றோ.க.வித்.
2009.01.01-2016.01.03
யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் கல்லூரி
2016.01.04-2019.12.31
யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்
2020.01.01-2023.10.16

Best Wishes

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.

(CS 001) A-1

# அமரர் பசுபதிப்பிள்ளை நினைவுநாள் நிகழ்வுகள்



வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் அமரர் பசுபதிப்பிள்ளையின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுயாதீன ஊடகவியலாளர் நிலாந்தன் நினைவுப் பேருரையாற்றினார்.

வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் பசுபதி அரியரத்தினம், கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அ. வேழமாலிகிதன் உள்ளிட்டோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கரைச்சிப் பிரதேசசபையின் பண்பாட்டுப் பெருவிழாவில் வைத்து வழங்கப்பட்ட ஆன்மீகத்துறைக்கான கதிரவேலு அப்புஜி ஞாபகார்த்த விருதும் தேகாந்த நிலையில் அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது.

(ச-113-125)



# கர்நாடக சங்கீத நடனம் உசன் ம.வித்தி. தேசியம்

யாழ்ப்பாணம், ஒக். 16
அகில இலங்கை கர்நாடக சங்கீத நடனப் போட்டியில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்கள் இருவர் தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

அகில இலங்கை நடனப் போட்டியின் மாகாண மட்டப் போட்டிகள் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

அதில் கீழ்ப் பிரிவு ஆண் தனிநடனத்தில் த.கபிநயன், சிரேஷ்ட பிரிவு ஆண் தனிநடனப் போட்டியில் சு. சுசீலன் ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

அதேவேளை, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் 5 போட்டிகளில் வெற்றியீட்டி தேசியப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

(ச-159)

**மரண அறிவித்தல்**

தோற்றம்
18 . 03 . 1946



மறைவு
15 . 10 . 2023

**இளையையா இரத்தினசிங்கம்**

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையையா இரத்தினசிங்கம் நேற்று (15.10.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இளையையா - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெதீஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குணசிங்கம், சரஸ்வதி, நாகரத்தினம், பேபிசறோசா மற்றும் தேவிசறோசா, மீனலோசினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அனாதரட்சகன், ஜெகதீசன், ஜெகரட்சகன், யோகேஸ்வரன் மற்றும் ஜீவரட்சகன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற மாறன் மற்றும் ஆரணி, கீரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பார்த்தீபன், சரண்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பாவரசன், பாவலன், கருசிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2023) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அடக்கம் செய்வதற்காக மணற்பிட்டி (அளவெட்டி) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவக்கிரி முத்துமாரி அம்மன்
கோவிலடி,
அளவெட்டி வடக்கு.

தகவல்
கீரன் (மகன்)
077 3043585

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டம்...

வதற்கான நிதி திறைசேரியிடம் இருந்து கோரப்பட்டுள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட புதிய கோரிக்கைப் பட்டியலையும் தேர்தல் ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட புதிய செலவினப் பட்டியலின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கு முதற்கட்டமாக 2.2 பில்லியன் ( 2ஆயிரத்து 200 மில்லியன்) ரூபா மட்டுமே தேவைப்படும் எனவும், எஞ்சிய தொகையை மூன்று மாத காலப்பகுதிக்குள் விடுவிக்க முடியும் எனவும் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

'நீண்டகாலமாக நிலுவையில் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதை உறுதி செய்வதற்கான மற்றொரு முயற்சியாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்று தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க தெரிவித்துள்ளார். அரசின் நிதி நிலைமை தற்போது முன்னேற்றம் அடைந்துவருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது செயற்படும் புதிய தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் கடந்த ஜூன் 29 ஆம் திகதியே நியமிக்கப்பட்டனர். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள குழுவினரின் இந்த நடவடிக்கை தேர்தலை நடத்துவதற்கான முதல் முயற்சியாக அமைந்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் திறைசேரிக்கு வழங்கப்பட்ட பட்டியலின் பிரகாரம், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாளில், 1.1 பில்லியன் ரூபாவும், அடுத்த 15 நாள்களுக்குள் 100 மில்லியன் ரூபாவும், அடுத்த 15 நாள்களுக்குள் 500 மில்லியன் ரூபாவும், அதற்கு அடுத்த 20 நாள்களுக்குள் 500 மில்லியன் ரூபாவும் கோரப்பட்டுள்ளது. இதில் தேர்தலுக்கு முன்னதாக பொலிஸ் திணைக்களத்துக்கு 400 மில்லியன் ரூபாவும், அரச அச்சகத்துக்கு 200 மில்லியன் ரூபாவும், அஞ்சல் திணைக்களத்துக்கு 500மில்லியனும்வழங்கப்படவேண்டும். இதற்கமைய தேர்தல் நடத்தப்படும்வரை 2.2 பில்லியன் ரூபாவே தேவைப்படும் எனவும், மீதமுள்ள 6.8 பில்லியன் தேர்தலுக்குப் பின்னரே தேவைப்படும் எனவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ஒ-44)

## காவாலித்தனம்...

யாழ்ப்பாணத்தில் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகநபராக அடையாளப்படுத்தப்பட்ட ஒருவரின் பிறந்த நாளை, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்குள் அத்துமீறி புகுந்து கொண்டாடியமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 150 பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை வேளையில் இந்தக் 'காவாலிக்கும்பலைச்' சேர்ந்த 150 பேர் யாழ். நகரப் பகுதியில் தலைக்கவசம் இல்லாது மோட்டார் சைக்கிளில் பெரும் பவனியாகச்சென்று, யாழ். மத்திய பேருந்து நிலையத்தினுள் நுழைந்து அங்கு பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அங்கு பயணிகளுடன் அட்டகாசத்திலும் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் அவர்கள் அங்கு வரவில்லை.

இந்தப் பிறந்தநாள் கொண்டாட்டம் தொடர்பான ரிக்ரொக் காணொலி வெளியானதையடுத்து, இது தொடர்பில் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுக்கு இது தொடர்பான விசாரணை பாரப்படுத்தப்பட்டுள்ளது. துரிதமாக விசாரணைகளை ஆரம்பித்த அவர்கள் இதனை ஒழுங்கமைத்த சந்தேகத்தில் இருவரைக் கைது செய்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணம் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். இருவரையும் விளக்கமறியலில் வைக்கப் பணித்த நீதிவான், ஏனையோரையும் கைது செய்யுமாறு பணித்துள்ளார். (அ-ஒ-26)

## உழவியந்திரம்...

உயிரிழந்துள்ளார். வலைப்பாட்டைச்சேர்ந்த சிதம்பரநாதன் வர்மன்குமார் (வயது - 32) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மருத்துவமனை முன்பாக பயணித்த உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த வர்மன்குமார் மோதியதாகவும், விபத்தில் படுகாயமடைந்த அவர் முழங்காவில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்படும்போது உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-5)

## மொட்டின்...

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் அடுத்த மாதம் பெயரிடப்படுவார் என்று அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

கட்சியின் மாநாடு நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்தக்கூட்டத்துக்கு முன்னதாக கட்சியின் மாநாடு நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்தக்கூட்டத்துக்கு முன்னதாக வேட்பாளர் தீர்மானிக்கப்பட்டு, கூட்டத்தின்போது அறிவிக்கப்படலாம் எனவும் அவர் கூறினார்.

'நாட்டில் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காகவே ஜனாதிபதிக்கு (ரணில்) ஆதரவு வழங்கினோம். மாறாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவருக்கு ஆதரவு என்ற இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை. மொட்டுக் கட்சியின் சார்பிலேயே வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார்' எனவும் ரஞ்சித் பண்டார கூறினார். (அ-ஒ-44)

## மயிலத்தமடு...

சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவனை கால்நடைவளர்ப்பு பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் தரைக் காணிகளில் தனியார் ஆக்கிரமிப்புகள் இடம்பெற்றுள்ளதாகக் கடந்த சில மாதங்களாக குற்றச்சாட்டுகள் முன்வைத்து, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பு என்பன இந்த நாட்டின் முதுகெலும்பாகும். இவை இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும். வெளிமாவட்டங்களில் இருந்து வந்து மட்டக்களப்பு, மயிலத்தமடுவில் விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களிலேயே விவசாயம் மேற்கொள்ள மாற்று இட ஒதுக்கீடுகள் வழங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இவ்வாறு மாற்று இடங்கள் வழங்குவதன் ஊடாக பண்ணையாளர்கள், விவசாயிகள் என இருதரப்பினருடைய பிரச்சினைகளும் முடிவுக்கு வரும் என ஜனாதிபதி தெரிவித்தார். மேலும் பண்ணையாளர்களின் பிரச்சினைகள் முடிவுக்கு வரும் வரை கால்நடைகளுக்கு உணவுகளை வழங்கத் தேவையான உதவித்தொகைகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார். (அ-ஒ.இ)

## கடையடைப்புத்...

கடையடைப்புத் தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று மாலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்,

கடையடைப்பு தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள், கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புகளை சந்திப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. நாளை செவ்வாய்க்கிழமை, கிழக்கு மாகாணத்தில் பொது அமைப்புகளைச் சந்தித்து, கலந்துரையாடி ஊடக சந்திப்பை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. முல்லைத்தீவில் குறித்த கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களிலும் குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் நாள்களில் நடைபெறும்.

மட்டக்களப்பில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொன். செல்வராஜாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்க தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா சென்றமையால் சந்திப்பில் அவர் பங்கேற்கவில்லை. எதிர்வரும் நாட்களில் நடைபெறும் சந்திப்பில் அவரும் கலந்துகொள்வார் - என்றார்.

கலந்துரையாடலில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-ஒ-இ)

## சீனாவுக்கு...

டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு நேற்றுப் பயணமாகியுள்ளார்.

இன்று முதல் 20ஆம் திகதி வரையில் சீனாவில் ஜனாதிபதி தங்கியிருப்பார்.

ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ள காலப்பகுதியில் அவருக்கு கீழுள்ள அமைச்சுகளின் பொறுப்புகள் இராஜாங்க அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-இ-44)

## அரச...

என எதிர்பார்க்கப்படுவதாக, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைக்க பல நாடுகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருப்பதால், அடுத்த மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி கிடைத்தவுடன் நிறுத்தப்பட்ட அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-இ)

## இஸ்ரேலில்...

காரணமான மனிதக்கடத்தல் நடவடிக்கைகள் குறித்த ஆபத்தான தகவல்களை இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ளது.

அண்மையில் வடக்கு இஸ்ரேல் எல்லைக்கு அருகில் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கைப் பெண்களும் மனிதக் கடத்தல்காரர்களால் ஜோர்தானில் இருந்து இஸ்ரேலுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்பதைத் தூதுவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜோர்தானிய மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகளின் கூட்டு முயற்சியால் குறித்த இருவரும் யாமூச் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

ஹமாஸின் தாக்குதலுக்கு உள்ளான இலங்கை நபர் முறையான அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் இஸ்ரேலுக்குள் நுழைந்ததாகவும் தூதுவர் மேலும் தெளிவுபடுத்தினார்.

தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு கிடைக்கும் அதே வேளையில், விசா இல்லாமல் நாட்டுக்குள் நுழைந்து சட்டவிரோதமாக அங்கு வசிக்கும் நபர்களுக்கு அந்த உரிமைகள் கிடைக்காது எனவும் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கைப் பெண்களை அடையாளம் காண ஜோர்தானுக்கான இலங்கைத் தூதுவர் பிரியங்கிகா விஜேகுணசேகர தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

ஜோர்தான் மற்றும் இஸ்ரேலைத் தளமாகக் கொண்ட ஆள்கடத்தல்காரர்கள், இலங்கையர்களைச் சட்டவிரோதமாக இஸ்ரேலுக்குள் அழைத்துச் செல்கின்றனர். இந்த நபர்கள் பெரும்பாலும் சுற்றுலா விசாக்களுடன் வந்து, இஸ்ரேலில் வேலை வாய்ப்பு இருப்பதாகக்கூறி வருகின்றனர்.

கடத்தல்காரர்கள் ஒப்புக்கொண்ட தொகையைச் செலுத்தியவுடன் தங்கள் கடவுச்சீட்டுகளை திருப்பித் தருவதாக உறுதியளிக்கிறார்கள், இது பொதுவாக 4 முதல் 5 மில்லியன் ரூபா வரை இருக்கும்.

இந்தத் திட்டங்களால் பாதிக்கப்படுபவர்களில் குழந்தைகள் உட்பட குடும்பங்களும் அடங்கும். இலங்கையர்கள் கைது செய்யப்படும் சந்தர்ப்பங்களில், அவர்கள் நாடு கடத்தப்படும் அபாயம் உள்ளது.

சுற்றுலா விசாவில் சட்டவிரோதமாக இஸ்ரேலுக்கு அழைத்து வரப்பட்டவர்களின் எண்ணிக்கை 800 முதல் ஆயிரம் வரை இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடன் பெற்று, சொத்துகளை அடமானம் வைத்து, கணிசமான தொகையை மனித கடத்தல்காரர்களிடம் செலுத்தியவர்கள் இலங்கைக்குத் திரும்ப முடியாது எனவும் தூதரகம் தெளிவுபடுத்தியுள்ளது. (அ-ஒ-இ)

## 45 நாள்களில்...

படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடைபெற்றது. நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 888 பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெற்றது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்துப் பிரதமராக கிறிஸ் ஹிப்கின்ஸ்



## வென்றது தேசியக்கட்சி

**வெலிங்டன், ஒக். 16**

**நியூஸிலாந்து நாட்டின் பொதுத் தேர்தலில் ஆளுங் கட்சியான தொழிலாளர் கட்சி படு தோல்வியைச் சந்தித்துள்ள நிலையில், எதிர்த்துப் போட்டியிட்ட தேசியக் கட்சி வெற்றிவாகை சூடியுள்ளது. அதன் தலைவரான கிறிஸ் ஹிப்கின்ஸ் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.**

நியூஸிலாந்து நாட்டின் பிரதமராக இருந்த ஜெசிந்தா ஆர்டன் கடந்த ஜனவரி மாதம் தனது பதவியைத் துறந்தார்.

அவரது ஆட்சியில் கொரோனாத் தொற்று நடவடிக்கை, ஊழல் குற்றச்சாட்டு போன்ற காரணங்களால் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்த நிலையில் அவர் தனது பதவியைத் துறந்தார்.

இந்த நிலையில் நியூஸிலாந்து நாட்டின் 54 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை பொதுத்தேர்தல் நடைபெற்றது.

இதில் தொழிலாளர் கட்சி, தேசிய கட்சி உட்பட பல்வேறு கட்சிகள் போட்டியிட்டன.

தேர்தல் முடிவுகளின்படி தேசியக் கட்சி 40 சதவீத வாக்குகளைப் பெற்றது.

அடுத்ததாக தொழிலாளர் கட்சி 25 சதவீத வாக்குகளைப் பெற்றது. இரு கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைக்காததை அடுத்து சிறுகட்சிகளுடன் கூட்டணி அமைத்துத் தேசியக் கட்சி ஆட்சியமைக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- இந்தத் தேர்தலில் தேசியக் கட்சியின் தேசிய வேட்பாளர் பட்டியலில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பொறியியல் ஆலோசகர் செந்தூரன் அருளானந்தம் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-6)


**வேலைக்கு ஆட்கள் தேவை**



A - 9 வீதியில் (குருநகரில்)
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட
Tyre Workshop க்கு
அனுபவம் வாய்ந்தவர்கள்
தேவை

T.P: 076 708 3707
076 686 0135

**வெளியீடு**

உயிரியல் பாட வழிகாட்டி நூல்
**Biology Guide Book**
பல்தேர்வு வினாக்கள், கட்டமைப்பு வினாக்களின்
தொகுப்புக்களை - யாழ்ப்பாணம்,
கொழும்பு புத்தகக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
ஆசிரியர் : M.M Alphons விலை 1200/-
T.P : 077 133 1529

**சிறுநீரகம் தேவை**

$B^+$ குருதி உடையவருக்கு
உடனடியாக $B^+$, $B^-$ மற்றும்
$O^+$, $O^-$ வகை சிறுநீரகம்
தேவை.
(50 வயதிற்குட்பட்டவர் விரும்பத்தக்கது)
076 362 7149 / 077 780 9925
(cs 26626) (N-1)





பாடசாலைத்தோட்டம்

# பணப்பரிசில் வென்றது பண்டத்தரிப்பு ஜசிந்தா

யாழ்ப்பாணம், ஒக்.16

முயற்சியாண்மையுடன் கூடிய பாடசாலைத் தோட்டத்தை சிறந்த முறையில் அமைத்தமைக்காக பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலை ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையை வென்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் விவசாயத் தோட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பாடசாலைகளில் உணவு விவசாய ஸ்தாபனத்தின் குறித்த இலக்கை அடைந்து பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலை சிறந்த பெறுபேற்றைப் பெற்றது.

இதனைக் கௌரவிக்கு நிகழ்வு கடந்த வாரம் மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

நிகழ்வில் கல்வி அமைச்சர், கடற்றொழில் அமைச்சர், வடக்கு **மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட பல உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-100,27)**


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

மலர்வு 01 . 02 . 1947



உதிர்வு 17 . 09 . 2023

கடந்த 17.09.2023 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சின்னத்தம்பி நவரத்தினம்**

(ஓய்வுநிலை இலங்கை மின்சார சபை)

குடும்பத்தின் குல விளக்கே - எங்கள்
விழி நிகர்த்த பேருறவே
அன்பின் திருவுருவே எம்மை
அனைத்திலும் காத்த பெருமகனே

வழியேதும் தெரியாமல் - நாம்
விழி மூடி அழுகின்றோம் அப்பா
உம் நினைவோடு நாம் வாழ்வோம்
நீடுதுயில் செய்திடுக. இறைவன் அடியில்

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (16.10.2023) திங்கட்கிழமை கீரிமலை புனிதத்தீர்த்தக்கரையிலும் தொடர்ந்து அவரது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் நடைபெறும். எதிர்வரும் (18.10.2023) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

077 340 9881 (CS 26627) (K-1) குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org